★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: கார்த்திகை 21உ வியாழன் (6—12—56) ★ ★ வெளியூர்: கார்த்திகை 21உ வெள்ளி (7—12—56) [இதழ் 153

கொழும்புத் திட்டத்தின் சாதனை!

வெல்லிங்டன், டிச. 4—

கொழும்புத் திட்டத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் 200 கோடி பவுன் (சுமார் ரூ. 2,660 கோடி) செலவிடப்பட்டிருக்கிறதாம்! கொழும்புத் திட்ட உறுப்பினர்களான 21 நாடுகளின் பிரதிநிதிகள் இங்கு கூடி ஆசிய நாடுகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான எதிர்காலத் திட்டம் குறித்து விவாதித்தனர்.

சுமார் 150 பிரதிநிதிகளிடை, கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் கியூசிலாந்து பிரதமர் மேற்கண்ட தகவலைத் தந்துவிட்டு, திட்டகாலமான ஆறு ஆண்டுக்குள் மொத்தம் 300 பவுன்—அதாவது, ரூ. 8,990 கோடி—செலவிடப்படும் என்றும் கூறினார்.

தமிழ் நாட்டுக் கலாச்சாரத்திற்கு செஞ்சீனப் பிரதமர் பாராட்டு

"இந்திய கலாச்சாரத்திற்கு சென்னை பெரும் பங்கு நல்கியிருக்கிறது"

தமிழகக் கலைஞர்களுக்கு சீனு வர அழைப்பு

நகரில் மகத்தான வரவேற்பு

சென்னை, டிச. 5—

"நான் சென்னைக்கு வந்து சில மணிகளே ஆகின்றன. இதற்குள்ளாக சென்னை நகரத்துடன் நான் கொண்ட முதல் தொடர்பினுல், இந்தியாவின் பெருமைக்குரிய கலாச்சாரத்திற்கு, சென்னை பெரும் பங்கு செலுத்தியிருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டுள்ளேன்.

"உங்கள் நகரிலிருந்து நாங்கள், எங்களுக்குப் பயன்படக்கூடிய பல விஷயங்களைக் கற்றுக்கொள்ள முடியும் என்று நம்புகிறோம்.

"இந்திய கலாச்சாரத்தின் உறைவிடமாகச் சென்னை நகர் விளங்குகிறது."

—இவ்வாறெல்லாம் செஞ்சீனப் பிரதமர் சௌ-என்-லாய், பெருமிதத்துடன் கூறியிருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

தெ. ஆ. சர்க்காரின் அடக்குமுறை

தேசத் துரோகக் குற்றம் சுமத்தி பல இனத் தலைவர்கள் கைது

ஜோகன்ஸ்பர்க், டிச. 5—

தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு தென்னுப்பிரிக்காவில் வாழும் இந்தியர்கள், ஆப்பிரிக்கர்கள், வெள்ளையர்கள், இதர இன மக்கள் சுமார் 140 பேர்கள்வரை இன்று காலை திடீரெனக் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

ஒரு மக்கள்சபை உறுப்பினர், ஒரு கிறிஸ்தவ மாதா கோயில் பூஜியர், பல தொழிற்சங்கத் தலைவர்கள், ஊழியர்கள், வழக்கறிஞர்கள் என்று பலரும் இந்தக் குற்றத்திற்காக நாடு நெடுகிலும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

இவர்கள்மீது, அந்நிய நாட்டுக்காக வேவு பார்த்தல் போன்ற தேசத் துரோகக் குற்றம் புரிந்ததாக வழக்குத் தொடரப்படுமாம்.

பொதுத் தேர்தல்கள்

தேதிகள் குறித்து குழு சிபாரிசு!

வரும் பிப்ரவரி 28-ந் தேதி முதல் மார்ச் 14-ந் தேதிக்குள் பொதுத் தேர்தல்களை நடத்திவிடலாம் என்று தேர்தல் கமிஷன் முடிவு செய்திருக்கிறதாம்.

இந்த முடிவு குறித்து டில்லி சர்க்கார் தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகவும் தெரியவருகிறது.

வானொலி வசதி: அகில இந்தியக் கட்சிகளுக்கு மட்டுமாம்

'தேர்தல் பிரச்சாரத்திற்கு வானொலி வசதி தரப்படவேண்டும்,' என்று தேர்தல் குழு சிபாரிசு செய்திருப்பதாகவும், இந்த வசதியை அகில இந்தியக் கட்சிகளுக்கு மட்டும் தருவது பற்றி டில்லி சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

படித்த வேலையற்றோருக்காக ஆறு தொழிற்சாலைகள்

ரூ. 3 இலட்சம் செலவில் கேரளத்தில் அமையுமாம்

புதுடில்லி, டிச. 5—

படித்த வேலையற்றோருக்கு வேலை தருவதற்காகக் கேரள மாநிலத்தில் ஆறு தொழிற்சாலைகள் துவக்கப்படும் என்றும், இதற்காக சுமார் ரூ 3 இலட்சம்வரை மாநில சர்க்காருக்கு டில்லி மானியம் வழங்கியிருக்கிறது என்றும் மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இதர மாநிலங்களில்!

'இதர மாநிலங்களில் இது போன்ற திட்டங்கள் பின்னுல் துவக்கப்படும்' என்றும், உதவி தொழிலாளர் மந்திரி அபீத் அலி தெரிவித்திருக்கிறார்.

புற்றுநோய் சிகிச்சைக்கு 'ஐசோடோப்' கருவிகள்

அதற்குரிய சாதனங்கள் சர்க்காரிடம் இல்லையாம்!

புதுடில்லி, டிச. 6—

புற்றுநோய் சிகிச்சைக்காக ஐசோடோப் கருவிகளை இந்திய மருத்துவ மனைகளில் இப்போதைக்கு உபயோகத்துக்குக் கொண்டுவர சர்க்கார் உத்தேசிக்கவில்லை என்றும், அதற்குரிய அவசியமான சாதனங்கள் சர்க்காரிடம் இல்லை என்றும் மாநிலங்கள் சபையில் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

டில்லிவிடும் ஓட்டைக்கப்பல்!

பருவநிலை மோசமானுல் நிறுத்தப்படுமாம்

புதுடில்லி, டிச. 4—

"'எஸ் எஸ் சோனுவதி' என்ற கப்பலைக்கொண்டு நடத்தப்பட்டுவரும் இரங்கூன்-சென்னை பிரயாணிப் போக்குவரத்து, பருவ நிலை மோசமாக உள்ள காலங்களில் நிறுத்தி வைக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டிருக்கிறது"

என்று, மாநிலங்கள் சபையில், அமைச்சர் அழகேசன் குறிப்பிட்டு விட்டு மேலும் சொன்னார்:—

"இக்கப்பல் 1936-ம் ஆண்டில் வாங்கப்பட்டது; மராமத்து வேலைகள் நீங்கலாகப் பெரும்பாலும் அதில் பழுது எதுவும் பார்க்கப் படவில்லை. 1956 செப்டம்பர் 8-ந் தேதியன்று இக்கப்பல் நடுக்கடலில் பயணம் செய்துகொண்டிருக்கையில், கடும் கொந்தளிப்பு காரணமாகக் கப்பல் தளத்தின் கூரை கழன்றுவிட்டதையடுத்து ஏற்பட்ட குழப்பத்தில் ஆறு பிரயாணிகளுக்குச் சொற்ப காயங்கள் ஏற்பட்டன."

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கலைமை நிலையச் செய்தி:

தி. மு. கழக

மத்திய செயற்குழுக் கூட்டம்

29—12—56 சனியன்றும்

பொதுக்குழுக் கூட்டம்

30—12—56 ஞாயிறன்றும்

சேலத்தில்

நடைபெறும்

'அறிவகம்' சென்னை 5—12—56 } —தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

எல்லாம் ஒரே நாளில்!

★

தனித்தனியாகக் கண்டு ரசித்தீர்கள்! எண்ணி எண்ணி மகிழ்ச்சி பெறுகிறீர்கள்!

டிசம்பர் 9 - உங்களுக்குக் கிடைப்பது புதியதோர் பொன்னுனவாய்ப்பு!

★

அண்ணு அவர்கள் தலைமையில்

கள்ள ரத்தினமாக **கே. ஆர். இராமசாமி** புதுமைப் பித்தனுக **எஸ். எஸ். இராசேந்திரன்**

எம். ஜி. இராமச்சந்திரன்

புதிய நாடகக் காட்சி தருகிறுர்

சுமைதாங்கி!

★

கலைஞர் கூட்டணி காண்கிறீர்! கழக முயற்சிக்கு உதவுகிறீர்! தேர்தல் வெற்றிக்கு வழிதேடித் தருகிறீர்!!

இத்தனையும் அளித்திடும் நாள்

டிசம்பர் 9 - எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

★

திரண்டு வாரீர்! மாற்றுக் கட்சிகள்—நாட்டைப் பிடித்தாட்டும் சர்க்கார் உணர வேண்டும்—

தி. மு. கழக வலிவும் பொலிவும்!

கட்டணம்: ரூ. 10, 5, 3, 1; பெண்கள் ரூ. 1.

குறிப்பு:-6—12—56 வியாழன் முதல் சென்னை—இராயபுரம் தி. மு. க. தலைமை நிலையத்தில் ('அறிவகம்') டிக்கெட்டுகள் கிடைக்கும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 6–12–'56 வியாழன்

பண்டாவும் பண்டிதரும்

"பண்டா என்ற செல்லப் பெயரால் அழைக்கப்படும் பண்டாரநாயகா எங்கள் நேருவின் நண்பர்; நேருவிடம் அபார மதிப்புக்கொண்டவர்; அவர் இலங்கையின் பிரதமராகியிருக்கிறார்; எனவே இனி இலங்கை இந்தியர் பிரச்சினைகள்—குறிப்பாகக் குடியுரிமைப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டு விடும்" என்று, இந்த நாட்டில் உள்ள பத்திரிகைகள், பண்டா பிரதமரானபோது எழுதின; நம்பிக்கை தெரிவித்தன.

பண்டாவின் வெற்றி, சிங்களவரது மொழி இன வெறியின் வெற்றி என்பதைச் சுட்டிக்காட்டி, நாம், 'இந்த நம்பிக்கை வீணானது' என்று சூசகமாக எடுத்துக்காட்டியிருந்தோம்.

பண்டா சர்க்கார் 'இலங்கை இந்தியரு'க்குக் குடியுரிமை வழங்குவதில் கையாண்டுவரும் நடைமுறைக் கொள்கை, பண்டாவைப் பற்றிய நமது மதிப்பீட்டை மெய்ப்பிப்பதாயிருக்கிறது.

'சுமார் 8 இலட்சத்திற்கும் அதிகமான 'இந்தியர்' என்ற பெயர் சுமத்தப்பட்டுள்ள திராவிடர்கள், 2,31,034 மனுக்கள் மூலம் குடியுரிமை கோரியிருந்தனர்; இந்த மனுக்களைப் பரிசீலனை செய்து குடியுரிமை தரப்படும் அல்லது தரப்பட மாட்டாது என்ற முடிவுகளை அறிவிப்பதில், கொத்தலாவலை சர்க்கார் ஆமை வேகத்தில் செல்கிறது; அதனால், உரிமை கோரியவர்கள் பலவகைத் தொல்லைகளுக்கும் ஆளாக நேரிடுகிறது; மேலும், கொத்தலாவலையின் 'கொடுங்கோன்மை', பரிசீலிக்கப்படும் மனுக்களில் பெரும்பாலானவற்றிற்குப் போதுமான காரணங்கள் இன்றி—இவர்களை நாடற்றவர்களாக்க வேண்டும் என்ற கெடுமதியால்— குடியுரிமை இல்லை என்ற முடிவையே வழங்கி வருகிறது' என்று முன்பு குற்றம் சாட்டப்பட்டு வந்தது.

ஆனால், பண்டாரநாயகா பதவிக்கு வந்தபின், மனுக்களின் 'பரிசீலனை' துரிதப்படுத்தப்பட்டு, 'தீர்ப்பு' விரைவாக அளிக்கப்பட்டு வருகிறது என்பதை, 'இந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில் 66,712 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன; 3,259 மனுக்கள் ஏற்கப்பட்டன; ஆனால் சென்ற ஆண்டு இதேகாலத்தில் (கொத்தலாவலை ஆட்சிக்காலத்தில்) 23,297 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன; 1,028 மனுக்கள் ஏற்கப்பட்டன' என்று தரப்பட்டிருக்கும் புள்ளிவிவரம் கூறுகிறது.

மனுக்களைப் 'பரிசீலி'க்கும் வேகம்தான் அதிகரித்திருக்கிறதே தவிர, பரிசீலிக்கும் முறை மாறவில்லை. குடி உரிமை மறுக்கும் அநியாயப் போக்கில் மாற்றம் இல்லை என்பதையும் புள்ளி விவரங்கள் தெளிவாக்காமல் இல்லை. குடி உரிமை கோரும் திராவிடரை 'நாடற்றவர்கள்' என்ற நிலைக்குக். கொத்தலாவலையை விடப் பண்டா, வேகமாகத் துரத்திவருகிறார் என்பதுதான் பொருள்.

இலங்கை சர்க்கார், தமிழர்களை—திராவிடர்களை இலங்கையிலிருந்து துரத்திவிடுவது என்பதற்காக, 'குடியுரிமை கிடையாது,' என்று ஏற்கனவே மேற்கொண்டுவிட்ட நன்றிகெட்ட முடிவை வெளிப்படையாக அறிவிப்பதற்கு ஒரு புகலிடமாகவே, 'மனுக்களைப் பரிசீலித்து முடிவு கூறுவது,' என்ற முறையைக் கொண்டிருக்கின்றனர்.

இதனை, 'தங்களுக்குக் குடியுரிமை மறுக்கப்பட்டது அநியாயம்,' என்று இலங்கை தலைமை உயர் நீதிமன்றத்தில் முறையிட்ட இருவாது அப்பீல்களுக்குத் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகளின் விமரிசனம் அம்பலமாக்கியிருக்கிறது, கடந்த கிழமையில்!

'மனுக்களைப் பரிசீலனை செய்யும் அதிகாரிகள் நீதி வழங்க வேண்டும் என்ற விருப்பத்துடனே, சாதாரண அறிவுடனே கூட நடந்துகொள்ளவில்லை,' என்று இலங்கை நீதிபதிகள் கூறியிருப்பது, தமிழர்களை அநியாயமாகத் துரத்தும் பண்டாரநாயகாவின் போக்கிற்கு நல்ல சவுக்கடியாகும்.

மனுக்கள் நிராகரிக்கப்பட்டவர்களின் நிலை என்ன? மொத்தமாக எல்லா மனுக்களும் இந்த ரீதியில் பரிசீலிக்கப்பட்டு 'முடிவு' கூறப்படுமேயானால், சுமார் ஆறு அல்லது ஏழு இலட்சம் பேர் வரையில் 'நாடற்றவர்'களாக்கப்படுவரே, அவர்களின் நிலை என்ன?

டில்லியில் இதுபற்றிச்செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம், 'மனுக்கள் பரிசீலனை முடிந்தவுடன் நாடற்றவர் பற்றி யோசிக்கலாம்' என்று கூறுகிறது.

பண்டா சர்க்கார், தலைமை உயர் நீதிமன்ற நீதிபதிகள் தந்துள்ள 'கடுமையான எச்சரிக்கை'யினால் திருந்தும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. இதுவரை நிராகரிக்கப்பட்ட மனுக்களில், அப்பீலுக்கு வந்தது போன்று அதிகாரிகளின் அநியாயத் தீர்ப்புக்கு ஆளாக்கப்பட்டவை எத்தனையோ? மனு நிராகரிக்கப்பட்ட அனைவரும், தலைமை உயர் நீதிமன்றம் சென்று நியாயம் பெறுவது சாத்தியமா? எனவே, தலைமை உயர் நீதிமன்றத்தின் 'தீர்ப்பு வாசகங்களை'ச் சுட்டிக்காட்டி, நிராகரிக்கப்பட்ட மனுக்களை மீண்டும் பண்டாரநாயகா சர்க்கார் பரிசீலிக்க வேண்டும் என்றும், அப்படி இலங்கை அதிகாரிகள் மனுக்களைப் பரிசீலிக்கும்போது, இந்தியாவின் தூதுவர் அலுவலகப் பிரதிநிதிகளும் உடனிருந்து ஆலோசனைகளைப் பரிமாறிக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் பண்டாரநாயகாவை டில்லிப் பெரியவர்கள் கேட்க வேண்டும். இந்த ஏற்பாட்டினை பண்டா ஏற்க மறுத்தால், நிராகரிக்கப்பட்ட மனுதார்களில் நியாயமாகக் குடியுரிமை பெற வேண்டியவர்கள் — பெறுவதற்குரிய அத்தனைத் தகுதிகளும் படைத்தவர்கள் தலைமை உயர் நீதிமன்றத்திற்குப் பல பிரிவினராகச் சென்று நியாயம் பெறுவதற்கு எல்லா உதவியும் செய்ய டில்லி முன்வர வேண்டும்.

கவனிக்குமா டில்லி? கவனிப்பாரா பண்டிதர்?

இலங்கையில் குடியேறியுள்ள 'இந்தியர்'கள் அனைவரும் திராவிடர்—மிகப் பெரும்பாலானோர் தமிழர் என்பதால் ஒரு தமிழரே இலங்கைக்கு இந்தியாவின் தூதுவராக நியமிக்கப்பட வேண்டும் என்று அங்குள்ளோர் எழுப்பும் சிறிய கோரிக்கையையே மதிக்கமறுக்கிற பண்டிதர், பண்டாரநாயகாவையா தட்டிக் கேட்கப் போகிறார்? அப்படி எதிர்பார்ப்பது பேதமை என்கிறது, கடந்த கால அனுபவம்!

தாயகம்—தமிழ் நாடு—திராவிட நாடு — தென்னாடு, 'பண்டிதர்களி'ன் ஆதிக்கப் பிடியிலிருந்து மீளும்வரை—தன்னாட்சி பெறும்வரை, பண்டாரநாயகாக்கள் திராவிடரை 'நாடற்றவராக' மட்டுமல்ல—நாதியற்றவராகவும்தான் ஆக்குவர்!

இலங்கைத் தமிழரின் நேரடி நடவடிக்கை?

ஆட்சியினரின் மொழி வெறிக்கு எதிராகக்கிளர்ச்சிகள் நடைபெறும்

கொழும்பு, டிச. 4—

மோட்டார்களில் உள்ள எண் பலகைகளில் சிங்கள மொழியைத் திணிக்க இலங்கை அரசாங்கம் முடிவு செய்துவிட்டதாம்.

இதை எதிர்த்து நேரடி நடவடிக்கை எடுப்பதற்குத் திட்டம் வகுக்க தமிழ் பேசும் மக்கள் மாநாடு ஒன்று கூட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

அனேகமாக இலங்கை அரசினரின் மொழிவெறியைக் கண்டித்து ஒரு கிளர்ச்சி நடைபெறும் எனக் கருதப்படுகிறது.

அனுமதியின்றி நுழைந்த மகளிருக்குத் தண்டனை

சவந்த்வாடி, டிச. 3—

அனுமதியின்றி சட்ட விரோதமாக இந்தியாவிற்குள் நுழைந்ததாக 16 கோவா இந்திய மாதர்களை போலீசார் கைது செய்து வழக்கு தொடர்ந்தனர்; மாஜிஸ்திரேட் ஒவ்வொருவருக்கும் ரூ. 5 அபராதம் விதித்துள்ளார்.

தங்களுடைய கணவர்களிடமிருந்து பணம் கிடைக்காததால், பட்டினி கிடக்கமுடியாமல் இந்தியாவிற்குள் நுழைந்ததாயும் இதைத் தவிர தங்களுக்கு வேறு வழியில்லை என்றும் அவர்கள் முறையிட்டனராம்.

நெய்வேலித் திட்டம்

மத்திய அமைச்சர் தகவல்

புதுடில்லி, டிச. 3—

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் இன்னும் ஆரம்பக்கட்ட வேலைகளில் உள்ளது

1960-ம் ஆண்டு இறுதியில்தான் முழு அளவில் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்படுமாம்.

1960-ம் ஆண்டு மத்தியில் ஒரு தர்மல் விசை நிலையம் ஏற்படுத்தப் படுமாம்.

1961-ம் ஆண்டு மே இறுதிக்குள் இரசாயன எரு உற்பத்திச் சாலை ஒன்றும் அமைக்கப்படுமாம்

இந்தத் தகவல்களை மாநிலங்கள் சபையில் உற்பத்தி அமைச்சர் கே. சி. ரெட்டி வெளியிட்டார்.

புதுடில்லி, டிச. 4—

1955—56ம் ஆண்டில் வேலை கிடைக்காததால் டில்லியில் 7 பேர் தற்கொலை செய்து கொண்டதாக மாநிலங்கள் சபையில் அமைச்சர் தத்தார் அறிவித்துள்ளார்.

ரூ. 19 இலட்சம் செலவில் ஒரு குளிர்சாதன இரயில் பெட்டி தயாராகிறதாம்!

ஆனால் 50 சதவிகிதம் பேர்தான் அதில் பிரயாணம் செய்கின்றனராம்!

அதன் அனுகூலத்தை மக்கள் அறிந்தபின் இந்நிலை மாறுமென அமைச்சர் அழகேசன் எதிர்பார்க்கிறாராம்!

புதுடில்லி, டிச. 4—

"முழுமையிலும் குளிர் சாதனப் பெட்டிகள் கொண்ட இரயில் வண்டிகளில் 50 சதவிகிதம் இடம் காலியாக இருக்கிறது" என்று மாநிலங்கள் சபையில் அமைச்சர் அழகேசன் கூறியுள்ளார்.

மூன்றாம் வகுப்புப் பெட்டிகளில் குளிர்சாதன வசதி செய்யப்பட்டிருப்பதையும், அதன் அனுகூலத்தை மக்கள் உணர ஆரம்பித்ததும் இந்நிலை மாறுமென எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குளிர்சாதனப் பெட்டியொன்றைத் தயாரிப்பதற்கு ரூ. 19 இலட்சம் செலவாகிறதாம்; ஆனால் இதில், இரவு நேரத்தில் நன்றாகப் படுத்துத் தூங்குவதற்கு வசதியில்லையாம். அப்பெட்டிகளில் சாமான்களை எடுத்துச் செல்லுவதற்கு அனுமதிப்பதில்லையாம்!

விரைவில் சென்னை—டில்லி, பம்பாய்—டில்லி இடையே இந்தக் குளிர்சாதனப் பெட்டிகள்கொண்ட இரயில்கள், பரீட்சார்த்தமாக சில மார்க்கங்களில் விடப்படுமாம்.

கல்கத்தாவில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்?

அசாம் எண்ணெயைக் குழாய் மூலம் கொண்டுவர இயலும்

புதுடில்லி, டிச. 4—

அண்மையில் அசாமில் கண்டுபிடிக்கப்பட்ட எண்ணெய்க் கிணறுகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயைச் சுத்திகரிக்கும் ஆலை ஒன்று நிறுவ உரிய இடத்தைத் தேர்ந்தெடுக்குமாறு இந்திய அரசாங்கம் நியமித்த குழு, கல்கத்தாவிற்கு முதலிடம் அளித்திருக்கிறது.

அரசாங்கத்திற்கு இக்குழு அளித்த அறிக்கையில், வடக்கு பீகாரில் உள்ள பரானியும், அசாமில் உள்ள நியாபாயும் காணப்படுகின்றன.

கல்கத்தாவிலாவது அல்லது பரானியிலாவது இந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவப்பட்டால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அசாம் எண்ணெய்க் கிணறுகளிலிருந்து, எண்ணெயைக் குழாய் மூலமே கொண்டுவர இயலுமாம்

குறைந்த விலையில் போர்வை, துப்பட்டி

போதுமக்களுக்கு கிடைக்குமாம்

புதுடில்லி, டிச. 5—

செயற்கை முறையில் கம்பளியும் சணலும் சரிசமமாகக் கலந்த போர்வைகளையும் துப்பட்டிகளையும் தயாரித்து மிகக்குறைந்த விலையில் பொதுமக்களுக்குக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறதாம்.

இதற்காக மேற்கு ஜெர்மனியிலிருந்து முதல்முதலாக ஒரு இயந்திரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாம்!

வழிதவறிய பெண்கள் புனர்வாழ்வுத் திட்டம்

மாநில விடுதிகள் அமைப்பு

புதுடில்லி, டிச. 1—

விபசார விடுதிகளிலிருந்து மீட்கப்பட்ட பெண்களின் புனர்வாழ்வுக்கும் இளங் குற்றவாளிகளின் புதுவாழ்விற்கும், சிறையிலிருந்து வெளியேற்றப்படும் யுவதிகளுக்கும் புதுவாழ்வு அளிப்பதற்கு சமூக நல நிறுவனம் அளித்துள்ள திட்டத்தை இந்தியப் பேரரசு ஏற்றுள்ளது

மாநிலங்களில் 9 விடுதிகளும் 26 மாவட்ட நிலையங்களும் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாநிலங்களில் 80 விடுதிகளும், மாவட்டங்களில் 330 நிலையங்களும் நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னையில் 2 விடுதிகள் ஏற்படுத்தப்படுமாம். 7 மாவட்ட நிலையங்களும் நிறுவப்படுமாம்.

ஒவ்வொரு விடுதியிலும் 100 பெண்கள் தங்கியிருக்க முடியுமாம்; ஒவ்வொன்றிலும் ஒரு உற்பத்திச் சாலை அமைக்கப்பட்டு, ஏதாவது ஒரு தொழிலில் இவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுமாம்.

ஒவ்வொரு மாவட்ட நிலையங்களிலும் பெண்கள்—ஆண்கள்—சிறுவர்கள் 50 பேர் வைக்கப்படுவர்; தக்க மேற்பார்வைக்குப் பின்னர் இவர்கள், மாநில விடுதிக்கு அனுப்பப்படுவர்.

கேட்டாரா, சேதி!

புதுடில்லி, டிச. 5—

'அரசாங்கத் தொழில்கள் சிலவற்றில் அமைச்சர்கள் சேர்மன், உதவி சேர்மன் போன்ற பதவிகளில் இருப்பதை இனியும் அரசாங்கம் ஆதரிக்குமா?' என்று மக்கள் சபையில் திரு. அவிநாசிலிங்கம் அவர்கள் கேட்டபோது, நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியதாவது:—

"அரசாங்கத் தொழில்கள் மிகவும் முக்கியமாக இருந்தாலொழிய, அவைகளில் சேர்மனாகவோ, உப-சேர்மனாகவோ பங்குகொள்ள அமைச்சர்களுக்கு நேரமிருப்பதில்லை; அவ்வாறு பங்குகொள்வது விரும்பத்தக்கது என்று ஆரம்பக் கட்டத்தில் கருதப்பட்டது" என்றார்.

"சில அமைச்சர்கள் சில அரசாங்கத் தொழில்களில் சேர்மன் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளார்கள்; அரசாங்க நலனை உத்தேசித்து இது அவசியமெனக் கருதப்பட்டது" என்று மற்றொரு உறுப்பினரின் கேள்விக்கு அமைச்சர் தத்தார் பதிலளித்துள்ளார்.

நகர சபைகளுக்கு சுயாட்சி உரிமை வேண்டும்

உறுப்பினர்கள் கோரிக்கை

திருச்சி, டிச. 1—

"நகரசபைகளுக்கு அரசாங்கம் சுயாட்சி உரிமை வழங்கவேண்டும்" என்று திருச்சி நகர சபையில் உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

1933-ல் நகரசபை சட்டம் வந்ததிலிருந்து நகர சபைகளின் உரிமைகளை அரசாங்கம் படிப்படியாகப் பறித்துவருகிறது என்றும், மாநில அரசுகளின் உரிமைகளை மத்திய அரசு பறிப்பதால், நகர சபைகளின் உரிமைகளை மாநில அரசு கைப்பற்றுகிறது என்றும், இந்த நிலைமை மாறவேண்டும் என்றும் திரு. காத்தப்பெருமாள் என்ற உறுப்பினர் குறிப்பிட்டார்.

'நகரசபை வெறும் தீர்மானம் நிறைவேற்றும் வரம்போடு பணியாற்றுகிறது; அந்தத் தீர்மானங்களைச் செயல்படுத்தும் உரிமையும் இருக்கவேண்டும்' என்று அவர் வற்புறுத்தினார்.

வினையின் பலன்!

பிரிட்டனில், 'அவசர நிலை'யை முன்னிட்டு பெட்ரோல் தீர்வை உயர்த்தப்பட்டுள்ளது.

பெட்ரோல் மொத்தவிலை காலன் ஒன்றுக்கு மூன்றரை பென்ஸ் வீதம் உயர்ந்துள்ளது; சில்லறை விலை 5-பென்ஸ் ஏறிவிடும்.

கழகச் செய்திகள்

பொட்டியம் தி. மு. கழகத் துவக்க விழா

31—10—56 காலை 10 மணிக்கு கள்ளக்குரிச்சி வட்டம் பொட்டியம் கிராமத்தில், தோழர் க. திருமலை மன்னன் தலைமையில் கிளைக் கழகம் துவக்கப்பட்டது. தோழர் கொ. மாரியப்பன் கழகக்கொடியை ஏற்றிவைத்தும், தோழர் ஆர் இராசு; ஆறுமுகம் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

மாயம்பாடி தி. மு. கழகத் துவக்க விழா

31—10—56 மாலை 4½ மணிக்கு கள்ளக்குரிச்சி வட்டம் மாயம்பாடி கிராமத்தில் தோழர் தம்பான் தலைமையில் கிளைக் கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் இராமன் கழகக் கொடியை ஏற்றிவைத்தும், தோழர்கள் எல். எஸ் சலாம், கொ. மாரியப்பன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

மாத்தூர் தி. மு. கழகத் துவக்க விழா

30—11—56 மாலை 6 மணிக்கு, கள்ளக்குரிச்சி வட்டம் மாத்தூரில் தோழர் மு. இராமசாமி தலைமையில் தி. மு. கழகத் துவக்கவிழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர் நாச்சியப்பன் கழகக்கொடியேற்றுவித்தார். தோழர்கள் ஏ கோவிந்தசாமி எம். எல். ஏ., எம் பி சுப்பிரமணியம் எம். எல். ஏ, வாசு, கொ. மாரியப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கொடமாத்தியில் தி. மு. கழகத் துவக்கம்

19—11—56 அன்று கள்ளக்குரிச்சி வட்டம் வடக்கநந்தல் சின்ன திருப்பதி மலை ஜாகிரில், பத்தாயிரம் அடி உயரமுள்ள மலைமேல் 50 அடி உயரக் கம்பத்தில், கொடமாத்தி தி. மு கழகத் துவக்க விழாவை யொட்டி தோழர் தமிழரசன் அவர்களால் தி. மு கழகக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது தோழர் க. இராமசாமி தலைமையில் அவ்விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் தமிழரசன், கொ. மாரியப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பெரம்பலூரில் தி. மு. க. பொதுக்கூட்டம்

25—11—56 மாலை 8 மணிக்கு பெரம்பலூர் ரேடியோ மைதானத்தில் தோழர் ஆர். சுந்தரராசன் தலைமையில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அமராவதி, மருதமுத்து ஆகியோர் கழகக் கொள்கைகளை விவரித்துச் சொற்பொழிவாற்றினர்.

மதுரையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

29—11—56 மாலை 7 மணிக்கு மதுரை அண்ணா திடலில், மதுரை நகர தி. மு. கழகச் சார்பில் தோழர் ஏ. எம். பால் தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. தோழர் கே. எஸ் சந்தானம் 'யுத்த வெறியர்கள்' என்பது பற்றிச் சிறிது நேரம் பேசியபின், தோழர் எஸ். முத்து, நியாயவிலைக் கடைகளில் நடைபெறும் ஊழல்களை விவரித்தும், தேர்தலில் தி. மு. கழகம் ஈடுபடுவது குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

துலுக்கம்பாளையத்தில் கொடியேற்று விழா

4—11—56 மாலை 5 மணிக்கு, துலுக்கம்பாளையத்தில் தோழர் எம். கே. கரிகாலன் கொடியேற்று விழாவாற்றினர். தோழர் என் ஆர். இராமசாமி எம்.சி. சொற்பொழிவாற்றினர்.

காவேரிநகர் வட்டக் குழு அமைப்பு

25—10—56ல் துடையூர் தி. மு. கழக இல்லத்தில், காவேரிநகர், துடையூர், கனியாபட்டி ஆகிய கிளைக் கழகச் செயலாளர்கள், உப்பிலியக்குடி கிராம முன்னேற்றக் கழகம், பசுமலைப்பட்டி கிராம முன்னேற்றக் கழகம், சத்தியமங்கலம் கே. வி. கே. சாமி நினைவு மன்றம் முதலிய அமைப்புகளின் செயலாளர்களும் ஒன்று கூடி காவேரிநகர் வட்ட தி. மு கழகக் குழு அமைக்கப்பட்டு. தோழர் துரை. மதிவாணன் வட்டக் குழுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சேலம் 9-வது வட்டத் தி. மு. கழகம்

17—11—56 இரவு 9 மணிக்கு, சேலம் 9-வது வட்ட தி மு. கழக நிர்வாகிகள் கூட்டம் தோழர் கே. எஸ். கோபால் தலைமையில், மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. சேலம் பீடித் தொழிலாளர் கிளர்ச்சியை ஆதரித்தும், கூலி நிர்ணயச் சட்டத்தை உடனடியாக அமுல் நடத்துமாறு சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், மற்றும் பல தீர்மானமுங்நிறைவேற்றப்பட்டன.

சேலம் 15-வது வட்ட தி. மு. கழகம்

28—11—56 இரவு 9 மணிக்கு சேலம் 15-வது வட்டத் தி மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் எஸ். சி வெங்கடாசலம் தலைமையில் நடைபெற்றது. செயலாளர்: ஏ. கந்தசாமி; துணைச்செயலாளர்: ஏ கருப்பண்ணன்; பொருளாளர்: எஸ். சி. வெங்கடாசலம். 14 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செல்வபுரம் (கோவை) தி. மு. கழகம

2—12—56 மாலை 5 மணிக்கு: தோழர் திருமூர்த்தி இல்லத்தில் நடைபெற்றப் பொது உறுப்பினர் கூட்டத்தில், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: ஆதிசிவம்; துணைச் செயலாளர்: இரா சுந்தரம்; பொருளாளர்: பி ஆர். சிவசுப்பிரமணியம். செயற்குழு உறுப்பினர்கள்: ச. தமிழ்மணி, க. மாணிக்கம், ப. தேவராசு ந. இராசு. அரியலூர் இரயில் விபத்திற்காளாகி உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், அவர்கள் குடும்பங்களுக்கு நஷ்டஈடு தருமாறு அரசியலாரைக் கேட்டுக்கொண்டும் தீமானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கரூர் நகர தி. மு. கழகம்

8—11—56 இரவு 8½ மணிக்கு கரூர் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் இரா வைரப்பெருமாள் எம்.சி. இல்ல மாடியில் தோழர் எம் கே. கரிகாலன் தலைமையில் நடைபெற்று சில முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

விழுப்புரம் தி. மு. கழகம்

2—12—56 மாலை 6 மணிக்கு விழுப்புரம் தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம், கீழ்ப்பெரும்பாக்கம்பள்ளியில்தோழர் சு. முத்துராமன் தலைமையில் நடைபெற்றது. தி. மு கழகத்திற்குத் தேர்தலில் ஆதரவு திரட்டுவது குறித்தும், தேர்தல் நிதி சேர்ப்பது குறித்தும் பல தோழர்கள் கருத்துரை வழங்கினர். கூட்டத்தில் கலந்து கொள்வதாக இருந்த தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல் ஏ., அவர்கள், இரயில் தாமதத்தின் காரணமாகக் கூட்டம் முடிந்த பின்னரே வந்தார் கழகத் தோழர்களுடன் சிறிது நேரம் உரையாடிவிட்டுச் சென்றார்.



23—11—56 காலை அரியலூருக்கு அருகில் நடைபெற்ற இரயில் விபத்தில் நொறுங்கிக் கிடக்கும் சில பெட்டிகளின் தோற்றம்

23—11—56 காலை அரியலூருக்கு அருகில் நடைபெற்ற இரயில் விபத்தில் மாண்டவர்களின் பிணக்குவியலின் ஒரு பகுதி

திருவெண்காடு தி. மு. க.

1—12—56 மாலை 3 மணிக்கு, திருவெண்காடு மேறவீதி துரைக்கண்ணு தையல் நிலையத்தில் தோழர் டி. வி. சம்பத் தலைமையில் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில் தூத்துக்குடி இரயில் விபத்தில் மாண்டவர் குடும்பங்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், தேர்தல் நிதி திரட்டுவது குறித்தும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் தோழர்கள் டி. வி. சம்பத், எம். குசலவன், க சின்னையன், எம். கோபால்சாமி, பி. சீனுவாசன், எஸ். கேசவன் ஆகியோரை முறையே தலைவர், செயற்குழுவினராகக் கொண்ட தேர்தல நிதி வசூல் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

நல்லூர் தி.மு. கழகம்

1—12—56 இரவு 7½ மணிக்கு நல்லூர் கிராமச் சாவடியில் தோழர் எம். செங்கோடன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில் தோழர்கள் ஏ. கே. ஆறுமுகம், கே. அருணாசலம், என். கே. பரமசிவம், ஏ ஆறுமுகம் ஆகியோரை முறையே செயலாளராகவும், செயற்குழுவினராகவும் கொண்ட தேர்தல் நிதிக்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. மேலும் இதநிங்கள் இறுதிக்குள் பொதுக்கூட்டம் நடத்தித் தேர்தல் நிதி அளிப்பதெனவும், தோழர் இரெ. இளவழுதி துணைவியார், கிளைக் கழகத் தோழர் காளிமுத்து தாயார் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

உலகப்பன்பாளையம் தி. மு. கழகத் துவக்க விழாவில் ஈ. வே. கி. சம்பத்

30—11—56 மாலை 6 மணிக்கு சேலம் மாவட்டம் உலகப்பன்பாளையம் தி. மு. கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். மாரிமுத்து மைதானத்தில் தோழர் கே. பொன்னுசாமி தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் வி சிவப்பிரகாசம், முனியப்பன், நடேசன் ஆகியோர் பேசினபின் தோழர் ஈ. வெ. கி. சம்பத் கழகத்தைத் துவக்கிவைத்து, காங்கிரஸ் ஆட்சியின் போக்கு பற்றியும், பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் கலந்து கொள்வதின் அவசியத்தை விளக்கியும் அரியதோர் உரை நிகழ்த்தினர்.

தோழர் சம்பத் அவர்களுக்கு பல கிளைக் கழகங்கள், மன்றங்கள், படிப்பகங்கள் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன

கூட்டத்தில், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக ரூ. 86 கொடுக்கப்பட்டது.

நிதி கொடுத்தோர் விவரம்

உலகப்பன்பாளையம் தி. மு கழகம் ரூ. 25; ஆலங்காடு இராமசாமி ரூ. 25; சடைகவுண்டன் பாளையம் இராமசாமி ரூ. 10; ச. பாளையம் பெரியசாமி ரூ. 5; ச. பாளையம் சுப்பராயன் ரூ. 5; ச. பாளையம் எஸ். நடேசன் ரூ. 2; கி. மாரத்தம்பட்டி பொன்னுசாமி ரூ. 2; கி. மாரத்தம்பட்டி சம்பூரணம் ரூ. 2; உலகப்பம்பாளையம் தி. மு. க. பொருளாளர் குப்புசாமி ரூ. 5; திருச்செங்கோடு டி. என். தங்கவேலு துணைவியார் சௌரியம்மாள் ரூ. 1; கப்பிட்டான் பாளையம் இராமசாமி ரூ. 2; குமாரமங்கலம் விவசாயிகள் சங்கம் ரூ. 2.

தி. மு. கழகத் தேர்தல் நிதி

கோவை மாவட்டம் கோமேடு தி. மு. கழகச் சார்பில் தேர்தல் நிதிக்கு ரூ. 25 அனுப்பப்பட்டது.

★

பெங்களூர் பென்னி மில் தொழிலாளர் தி. மு. கழக தேர்தல் நிதிக் குழு

2-12-56 மாலை 5 மணிக்கு, தோழர் மா. மன்னர் அவர்கள் இல்லத்தில் தோழர் எஸ். வி. பதி தலைமையில் நடைபெற்ற பென்னி மில் ஆலைத் தொழிலாளர் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்குழு அமைப்புக் கூட்டத்தில் தோழர் மு. கிருட்டிணன், கி. இராமச்சந்திரன் ஆகியோர் முறையே செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்தல் நிதி வசூல் குறித்துச் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இஸ்ரேலை சுற்றியுள்ள நாடுகளுக்கு சர். ஏ. இராமசாமி அறிவுரை

'நாகி கைது செய்யப்பட்டது குறித்து ரஷ்யா விளக்கம் தர வேண்டும்'

புதுடில்லி, டிச 6—

"மத்தியக் கிழக்கில் நிரந்தரமான குடிமக்களாகி விட்டனர் யூதர்கள்; ஒரு சுய ஆதிபத்திய உரிமை கொண்ட சுதந்திர நாடு ஒன்றும் நிலைத்துவிட்டது. இஸ்ரேலைச் சுற்றியுள்ள நாடுகளிடை, இந்த இஸ்ரேலை அழித்துவிட வேண்டும் என்ற விருப்பம் நிலவும்வரை மத்தியக் கிழக்கிலோ, உலகிலோ அமைதி நிலவ முடியாது.

"எனவே, சமாதானத்திற்காகப் பாடுபடுகிறவர்கள், 'ஒரு சுதந்திர நாடு அழிக்கப்பட முடியாது' என்ற உண்மையை சகலரும் ஒப்புமாறு செய்தாக வேண்டும்; நமது முயற்சி அந்தத் திசையில் இருக்கவேண்டும்"

என்று, சர். ஏ. இராமசாமி (முதலியார்) அவர்கள் டில்லி மாநிலங்கள் சபையில் அயல் நாட்டு விவகாரங்கள் குறித்துப் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

விளக்கம் வேண்டும்

"ஹங்கேரியில் நடைபெற்ற சம்பவங்கள் துரதிருஷ்டவசமானவை.

'நாகி கைது செய்யப்பட்டது குறித்து, ரஷ்யாவும் ஹங்கேரி சர்க்காரும், 'எப்படி நிகழ்ந்தது' என்பதற்கான விளக்கம் தந்தாக வேண்டும்"

என்றும், சர். ஏ. இராமசாமி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆந்திரப் பிரதேசத்திற்கு மேல்(சட்ட)சபை

ஆந்திரப் பிரதேசத்திற்கு ஒரு மேல்(சட்ட)சபை அமைக்க வேண்டும் என்று மக்கள் சபைக்குச் சிபாரிசு செய்கிற சர்க்காரின் தீர்மானம் ஒன்று சட்டசபையில் பெருவாரியான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

57-58-ம் ஆண்டு சென்னை வரவு - செலவுத் திட்டம்

சென்னை டிச. 6—

1957-58-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் இம்மாதம் 17-ந் தேதியன்று சட்டசபையில் சமர்ப்பிக்கப்படுமெனத்தெரிகிறது

பந்தநல்லூர் தி.மு. கழகத் தோழர்கட்கு:

7—12—56 மாலை 6 மணிக்கு தோழர் சோமு தையல் நிலையத்தில், கிளைக் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். தி. மு கழகத் தேர்தல் நிதி திரட்டுவது குறித்து ஆலோசிக்கப்படும்.

சென்னை தமிழாசிரியர் கழக உறுப்பினர் கூட்டம்

8—12—56 மாலை 4½ மணிக்கு சென்னை பச்சையப்பன் கல்லூரிப் பள்ளியில், திரு. மயிலை. சிவ-முத்து தலைமையில் சென்னை தமிழாசிரியர் கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

கழகக் கூட்டம்

★

துறையூர்:

பிள்ளையார் கோவில் திடலில்

8—12—56 மாலை 6½ மணிக்கு

தலைவர்: அ. சித்தி

பேசுவோர்:

மு. கருணாநிதி
அம்பில் தருமலிங்கம்
து. ப. அழகுமுத்து

டில்லியில் அர்த்தால்

மக்கள் சபைமுன் 400 பேர் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, டிச. 5—

மாநிலங்களுக்கு இடையே விதிக்கப்படும் விற்பனை வரியிலிருந்து டில்லிக்கு விலக்களிக்க வேண்டும் என்று கோரி, டில்லி வர்த்தகர்களும் வர்த்தக ஊழியர்களுமாக சுமார் 400 பேர் மக்கள் சபை முன் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

தலைநகர் என்ற காரணத்தினால் டில்லி ஒரு தனி மாநிலமாகக் கருதப்பட்டு வருவது தெரிந்ததே!

டில்லி இந்துஸ்தான் வர்த்தகச் சங்கம் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தது. பல மொத்த வியாபாரிகள் இன்று, ஹர்த்தால் செய்து வரி விதிப்பிற்கு எதிர்ப்புக் காட்டியிருக்கின்றனர்.

ஐ. நா. செயலாளர் வர ஹங்கேரி இன்னும் அனுமதி தரவில்லையாம்!

வியன்னா, டிச. 5—

வரும் டிசம்பர் 16-ந் தேதியன்று ஐ நா. செயலாளர் ஹங்கேரி செல்வார் என்று அறிவிக்கப்பட்டிருந்ததல்லவா?

ஆனால் இப்போது 'ஹங்கேரி சர்க்கார் அதற்குச் சம்மதிக்கவில்லை,' என்று புதாபெஸ்ட் வானொலி தெரிவித்திருக்கிறதாம்

"பிறிதோர் நாளில் ஐ நா. செயலாளர் மட்டும் வர அனுமதிக்கப்படுவார் என்றுதான் கூறினோமே தவிர, 16-ந் தேதி அவர் இங்கு வரலாம் என்று நாங்கள் கூறவில்லை" என்று ஹங்கேரி சர்க்கார் கூறியிருப்பதாக புதாபெஸ்ட் வானொலி கூறியிருக்கிறதாம்.

முன்னால் ஒப்புக்கொண்டதாம்

முதலில் 16-ந் தேதியன்று ஐ. நா. செயலாளர் புதாபெஸ்ட் வர ஹங்கேரி சர்க்கார் சம்மதம் அளித்திருந்ததாகவும், அதன் பேரிலேயே ஐ நா. சபையில் தேதி அறிவிக்கப்பட்டது என்றும் மற்றொரு அறிவிப்புக் கூறுகிறது.

ஹங்கேரி பெண்கள்மீது ரஷ்ய இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம்

இந்திய தூதுவர்கள் வந்தபோது ஆர்ப்பாட்டம்

புதாபெஸ்டு, டிச. 5—

சாமான் ஏற்றிச் செல்லும் இரயில் வண்டிகளில் ஹங்கேரி மக்களை ரஷ்ய இராணுவத்தினர் ஏற்றி ரஷ்யாவுக்குக் கடத்திச் சென்றனர் என்பதை ஹங்கேரியில் இப்போதுள்ள காதர் சர்க்காரின் பிரதிநிதி ஒப்புக்கொண்டிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

நவம்பர் 4-ந் தேதிக்குப் பிறகு, சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது ரஷ்யத் துருப்புகள் இப்படி ஹங்கேரி மக்களைக் கடத்திச் சென்றதாகவும், பின்னர் ஹங்கேரி சர்க்கார் ஆட்சேபித்ததின்பேரில் ரஷ்யா அவர்களைத் திருப்பிக் கொண்டுவந்துவிட்டது என்றும் அந்தப் பிரதிநிதி பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

இந்தியாவின் தூதுவர்கள்

மாஸ்கோ, புதாபெஸ்ட் நகரங்களில் இந்தியாவின் தூதுவராக உள்ள கே. பி. எஸ். மேனன் அவர்களும் ஜெகன்னாத்கோஸ்லா என்ற நேருவின் பிரதிநிதியும் புதாபெஸ்ட் வந்து சேர்ந்தபோது, ஹங்கேரிப் பெண்கள் தெருக்களில் கூடி நின்று வரவேற்றிருக்கின்றனர்.

ஆர்ப்பாட்டம்

இவர்கள் வந்து சென்றபின், கூடியிருந்த பெண்கள் கருப்பு உடைதரித்து, ஹங்கேரி புரட்சியில் நாட்டின் 'விடுதலை'க்காக உயிர்த் தியாகம்புரிந்த வீரனின் நினைவுச் சின்னத்தைச் சுற்றி நின்று, ஹங்கேரியின் தேசியக் கொடிகளைக் கையில் ஏந்தியவண்ணம் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

துப்பாக்கிப் பிரயோகம்

இந்த ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்காக நிராயுதபாணிகளான ஹங்கேரியப் பெண்கள்மீது ரஷ்ய இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து பலரைப் படுகாயப் படுத்தி, முடமாக்கியிருக்கின்றனர்.

கீரம்பூரில் மு. கருணாநிதி நிகழ்ச்சிகள்

8—12—56 காலை 10 மணிக்கு கீரம்பூர் உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்றச் சார்பில் சிறப்புக் கூட்டம் நடைபெறும். தோழர் மு. கருணாநிதி 'தமிழ் அன்றும் இன்றும்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

ஊராட்சிமன்ற வரவேற்பு

அச்சிறப்புக் கூட்டத்தின்போது கீரம்பூர் ஊராட்சிமன்றச் சார்பிலும், தி. மு. கழகச் சார்பிலும் வரவேற்பிதழ்கள் வாசித்தளிக்கப்படும்.

அறந்தாங்கி தி. மு. கழக வட்டக் குழு அமைப்பு

8-12-56 பிற்பகல் 3 மணிக்கு அறந்தாங்கி தி மு. கழக இல்லத்தில், அறந்தாங்கி தாலுகா தி மு கழக வட்டக் குழு அமைப்புக் கூட்டம் நடைபெறும் வட்டக் கிளைக் கழக நிர்வாகிகள் கலந்துகொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சீனப் பிரதமர்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இன்று காலை 10-5 மணியளவில் செஞ்சீனப் பிரதமர் சௌ-என்-லாய், துணைப் பிரதமர் ஹோலுங் முதலானோர் மீனம்பாக்கம் விமான நிலையம் வந்து சேர்ந்தபோது ஆயிரக்கணக்கான மக்களும், கவர்னர், மந்திரிகள், உயர்தர அதிகாரிகள் ஆகியோரும் கூடிநின்று அவர்களுக்கு மகத்தானதோர் வரவேற்பு அளித்தனர்.

வழி நெடுக!

விமான நிலையத்திலிருந்து 'இராச பவனம்' செல்லும் வழி நெடுக ஆங்காங்கே மக்கள் கூடி நின்று, செஞ்சீனப் பிரதமரைக் கண்டு மகிழ்ந்தனர்.

ஜெமினியில்

'ஜெமினி ஸ்டுடியோ' சென்று படப்பிடிப்பு முதலானவற்றைக் கண்டதுடன், தமிழகக் கலைஞர்கள் தந்த வரவேற்பையும் பெற்றுக்கொண்டு, அவர்களைப் பாராட்டியிருக்கிறார், சீனப் பிரதமர்.

தமிழகக் கலைஞர்களுக்கு அழைப்பு

"சென்னையிலிருந்து கலைஞர்கள் செஞ்சீனாவுக்கு வந்து தங்கள் கலைத் திறனைக் காட்டவேண்டும்' என்று சீனப் பிரதமர் அழைப்புத் தந்திருக்கிறார்.

நகரசபை வரவேற்பு

சென்னை நகர சபையின் சார்பில், 'ஸ்டேடியத்'தில் சீனப் பிரதமருக்கும் குழுவினருக்கும் பிரமாதமானதோர் வரவேற்புத் தரப்பட்டது.

நகரசபைத் தலைவர், சீனப் பிரதமர் குழுவினருக்கு வரவேற்பு இதழ் வாசித்தளித்ததுடன், 'அசோக ஸ்தூபி' ஒன்றை பரிசாகவும் அளித்திருக்கிறார்.

வரவேற்புக்குப்பின் பேசிய சௌ, இந்தியாவும் சீனாவும் நண்பர்களாயிருக்க வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்திப்பேசியதுடன், நட்புறவு மேலும் வளரவும் நீடிக்கவும் வேண்டுமென்று தாம் விழைவதாகவும் கூறியிருக்கிறார்.

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே — மண்ணடி — சென்னை - 1.

★

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

KNOWLEDGE IS POWER

சென்ற வருட நவம்பர் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட நவம்பரில் முடிவடைந்தன.

புதிய வகுப்புகள்

டிச. 10-ந் தேதி ஆரம்பமாகின்றன

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள

கடைசி தேதி: 9-12-1956

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும் சொந்தமாகக் கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் வகுப்பிற்கு வந்து ஒருமணி நேரம் படித்தால் போதுமானது.

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

முக்கிய அறிவிப்பு: 16 வயதிற்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.